RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s131

OPEN ACCESS

# புறப்பாட்டு விளம்பும் தமிழர் பண்பாடு

வீ. விஜியலட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, சி.கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர்-607001, தமிழ்நாடு, இந்தியா.

# Poorappattu Velambum Tamilar Panpadu

V. Vijiyalakshmi [a, *]

[a] Department of Tamil, C. Kandaswami Naidu College for Womens, Cuddalore–607001, Tamil Nadu, India.

* Corresponding Author: veerakumari3680@gmail.com

Received: 16-03-2021
Revised: 28-01-2022
Accepted: 02-02-2022
Published: 26-02-2021

Check for updates

## ABSTRACT

If there is a cultural repository of ancient Tamilians it is the Sangam period. They are becoming famous in all fields of political culture, art, trade, foreign relations etc. Although most of the Sangam literature speaksof love and braveness, it also highlights the generosity of the Tamilians and the high moral values necessary for the life of the people. Based on this, you can see the Tamil culture found in the late forties in this article.It shows brotherhood responses among the people of the world, maintaining personal virtue, happily welcome others with relationships, faith in god and pursuing careers for the betterment of whole life. It is a pity that humanism still supports the status of brotherhood in this world and their subsequent emergence as a galactic power.

**Keywords:** Tamil Culture, Social Responsibilities, Humanism, Brotherhood.

## முன்னுரை

தமிழர்களின் வாழ்வின் எழுச்சியான காலம் என்றால் அது சங்ககாலம் ஆகும். அரசியல் பண்பாடு, கலை, வாணிபம், அயல்நாட்டுத் தொடர்பு முதலிய அனைத்துத் துறைகளிலும் தமிழன் புகழ் பெற்றுத் திகழந்தான். எனவே இதனை பொற்காலம் என்று கூறலாம். மனித சமுதாயத்தில் தனது எண்ணங்களைப் பிறரிடம் பகிர்ந்து கொள்வதற்கு சிறந்த கருவியாக இருந்தது மொழியாகும். இந்த மொழியின் கலைத்தேடலே இலக்கியம் ஆகும். அவ்வகையில் சங்ககாலம் நமக்கு அளித்த இலக்கியங்களே பாட்டும் தொகையுமாகும். அவ்விலக்கியங்களின் பொது கூறுகளாக விளங்குபவை காதல், வீரம் ஆகும். சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையாககாதல், வீரம் பேசப்பட்டாலும் அதுமட்டும் இன்றி தமிழருக்கே உரிய பண்பான கொடைப்பண்பும், மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அறம் சார்ந்த உயரிய சிந்தனைகளும் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

சங்க இலக்கிய தொகை நூல்களில் புறத்திணையினைப்பாடுப் பொருளாகவும், தமிழரின் வரலாற்று பெட்டகமாகவும் விளங்கக் கூடியது புறநானூற்றுப் பாடல்கள் ஆகும். இவை உலகளவிய உயர் சிந்தனைகளை உள்ளடக்கியகலனாக விளங்குகின்றன. மானுட, சமூகத்தில் காணப்பட்ட வேறுபாடுகள் மறைவதற்கு 'பண்பாடு' என்ற வளர்ச்சி நிலை காரணமாகயிருந்தது. தனி மனித சிந்தனையும் குழுச்சிந்தனையும் ஒருங்கிணைந்து இருத்தல் பண்பாடு உருவாவதற்கு அவசியமானதாக உள்ளது. இதன் அடிப்படையில் புறநானூற்றில் காணலாகும் தமிழர் பண்பாட்டை இக்கட்டுரையில் காணலாம் (Kalpana Seikiyar, 2009).

## சகோதரத்துவத்தின் உன்னதம்

மானிடம் நாடோடி வாழ்க்கை வாழ்ந்துக் கொண்டிருந்தான். பின்னர் ஓர் இடத்தில் குழுவாக கூடிவாழ ஆரம்பித்தான். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பார்கள். அதன்வழி குழு இனமக்களாக தன்னினத்தோடு வாழகற்றுக் கொண்டான். உண்மையான வாழ்வானது உலக இயல்புக்குத் தக்கவாறு அனுபவசிந்தனையுடனும் இயைந்த கற்பனையுடனும் போற்றத்தக்கவகையில் அமைத்துக் கொள்ளவேண்டும்.

"நீர் வழிப்படூ உம்புனை போல் ஆருயிர்

முறை வழிப்படூ உம் என்பது திறவோர்

காட்சியின் தெளிந்தனம்!"

பெரிய ஆற்றில் நீர் ஓடும் வழியில் செல்லும் தெப்பம் போல மனித உயிரானது இயற்கை முறைவழியே வாழ்க்கை நடக்கும் என்பதை சான்றோர் பெற்றிருந்த அனுபவ அறிவின் வழி தெளிவுற்றோம் (Subiramaniyan, 2010). வாழ்க்கையின் அனுபவத் தெளிவைத் தெளிவான வழிமுறையில் கணியன் பூங்குன்றனார் உணர்வுக்கு அழகிய வடிவம் தந்துள்ளார்.

"யாதும் ஊரேயாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர்தரவாரா"

மேற்கூறியவரியானது மனித சகோதரத்துவத்தை உலகுக்குபறைசாற்றிய முதல் தமிழ்க்கவிஞன் என்ற பெரும் பேறுபெற்றவன் கணியன் பூங்குன்றனார் (Subiramaniyan, 2010).

## தனிமனித ஒழுக்கம்

'சான்றோர் விளக்கியனவெல்லாம் ஒழித்தலும், விதித்தன செய்தலும் அறம்' என்று கொள்ளலாம். தனி மனிதனின் நற்பண்புகள் என்பது அவன் சார்ந்த சமூகத்தோடு தொடர்புடையது ஆகும். சங்ககாலத்தில் தமிழர்கள் அறத்தைமதித்துப் போற்றியுள்ளனர். தனிமனிதனின் ஒழுக்கமே சமுதாயத்தை மேன்மையுறச் செய்யும் இதனைகருத்தில் கொண்டே பல்வேறு அறக்கருத்துக்கள் தனிமனிதரை முதன்மைப்படுத்தியே சொல்லப்படுகின்றன.

"சிறப்புடைமரபின் பொருளும் இன்பமும்

அறத்து வழிப்படூஉம் தோற்றம்போல"

மேற்கூறியவரிகளின் வழிகோவூர்கிழார், சிறப்பான வழி முறைகளை மேற்கொள்ளும் பொழுது தான் பொருளும் இன்பமும் வந்து சேரும் என்றும் அறத்தின் வழி மூலமாகவே இவற்றை அடையவேண்டும் என்று வலியுறுத்துகின்றார் அதனால் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றில் அறமே முதன்மையானது, வலிமையானது, உயர்வானது எனலாம் (Subiramaniyan, 2010).

"வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்

மெய் கூறுவல்"

மருதன் இளநாகனார் இப்பாடலின் வழிசங்கப் புலவர்கள் வறுமையிலும் வாய்மையைப் போற்றி வாழ்ந்தனர் என்பதை பறைசாற்றுகின்றார் (Subiramaniyan, 2010). தன்னை காத்துக் கொள்ள பிறரை கெடுத்து வாழும் அற்பதனமான செயல்பாட்டை மேற்கொள்ளாமல் வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றி தான் சார்ந்த சமூகத்தை நன்முறையில் வழி நடத்துவதே தனிமனிதனின் சிறந்தபண்பாகும்.

## விருந்தோம்பல் பண்பு

குடும்பம் என்பது சமுதாயத்தின் ஓர் அடிப்படைக் கூறாகும். குடும்பம் நீடித்து நிலைபெறத் திருமண ஏற்பாடு மிகவும் இன்றியமையாதது. தலைவன், தலைவி குறித்தகளவு, கற்புவாழ்க்கை

குறித்து சங்க அகநூல்களில் விரிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால் புறப்பாடல்களில் திருமணம் குறித்த பாடல்கள் இடம்பெறவில்லை என்றாலும் கணவன் மனைவி இல்வாழ்க்கை பற்றிய குறிப்புகள் நிரம்ப காணலாம். இல்வாழ்க்கையில் தமிழரின் தலைசிறந்த பண்புவிருந்தோம்பல் ஆகும். தம்மை நாடிவரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று அன்போடும், ஆர்வத்தோடும் உபசரிப்பதைக் கடமையாகக் கொண்டனர்.

“அமிழ்தட்டு ஆனாக்கமழ்குய், அடிசில்

வருநர்க்குவரையாவசையில் வாழ்க்கை”

என்ற வரிகளில் விருந்தினருக்கு சுவையான உணவளித்து விருந்தோம்புவதே பழியற்றவாழ்க்கை என்பதை ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர் உணர்த்துகின்றார் (Subiramaniyan, 2010).

“முதுநீர்ப்பாசி அன்ன உடைகளைந்து

திருமலர் அன்ன புதுமடிக்கொளீஇ”

என்ற பாடல் வரியானது தன்னை நாடிவந்த விருந்தினருக்கு மகிழ்வூட்டும்மதுவுடன் அமிழ்து போன்ற சுவையுடன் கூடிய ஊன் உணவை உண்ணகொடுப்பதற்கு முன்னால் அவன் இடுப்பில் இருந்த பாசிபிடித்த உடையை அகற்றி புத்தாடை உடுக்கச் செய்வான் (Subiramaniyan, 2010). இல்லம் தேடிவந்த புதியவருக்கு உணவு அளிப்பதுடன் உடைமுதலியனதந்து அறம்புரியும் திறத்தை உடையவனாக திகழ்ந்தான் என்று ஔவையார் மொழிந்துள்ளார்.

## கடவுள் நம்பிக்கை

பண்டைய தமிழ்மக்கள் ஐம்பூதங்களையே கடவுகளாக வழிபட்டனர். இயற்கை சீற்றத்திலிருந்து தன்னைகாத்துக் கொள்ள வழிபாட்டு முறைகளை மேற்கொண்டனர். ஐவகை நிலங்களாகபகுக்கப்படுத்தப்பட்ட தன் பிறகு குறிஞ்சி- முருகன், முல்லை-மாயோன், மருதம்-இந்திரன், நெய்தல்-வருணன், பாலை-கொற்றவை என்பதைத் தொல்காப்பியத்தின்,

“தெய்வம், உணவே, மா, மரம், புள், பறை

செய்தியாழின் பகுதியொடு தொகை”

என்ற நூற்பாவில் கருப்பொருள் குறிப்பிடப்பட்டுள்ளது (Raja, 2008). கருப்பொருளாக தெய்வத்தை புறநானூற்றுப் பாடலிலும் இறைநம்பிக்கையினது வழிகாணலாம் (Kalpana Seikiyar, 2009).

“பணியர் அத்தை, நீன்கொனயே-முனிவர்

முக்கண் செல்வர் நகர்வலம் செயற்கே”

என்ற பாடலில் காரிகிழார் முதுகுடிமிப் பெருவழுதியின் சிறப்பை போற்றும் பொழுது ‘உன்வெண் கொற்றக் கொடைமுனிவர்களால் வணங்கப் பெறும் சிவபெருமான் திருக்கோயிலை வலம் வருவதற்குத் தணிவதாக’ என்கிறார் (Subiramaniyan, 2010).

“அணங்குடை முருகன் கோட்டத்துக்

கலம் தொடாமகிளிரின்”

பொன் முடியார் மேற்கூறிய பாடல்வரியில் வேந்தர்களின் கத்தரிக்கப் பெற்ற பிடரிமயிரினை உடைய குதிரைகள் தெய்வத் தன்மை கொண்ட முருகன் கோயிலில் கலங்களைத் தொடாத விலக்குடையமகளிரைப் போல ஒதுங்கி நிற்கும் என்று விளக்குகிறா (Subiramaniyan, 2010)ர். இது போன்று திருமால், இமயவர், பலித் தேவன் போன்ற பல தெய்வங்களுக்கும் கோயில்கள் இருந்தன. இங்ஙனம் கடவுளை உணர்ந்து வழிபட்டு ஒழுகிய மக்கள் வினை உயர்வும் மறுபிறப்பு உண்மையும் மேற்கொண்டிருந்தனர்.

“நீள் இலை எஃகம்மறுத்த உடம்பொடு
வாரா உலகம்புகுதல் ஒன்று” (Subiramaniyan, 2010)

என்று பரணர் தனது பாடலில் நிலையாமை பற்றி உரைக்கும் பொழுது வீரமிக்க ஆற்றலோடு போர் புரியும் தருணம் நீண்ட இலை வடிவில் உள்ள வேல் கிழித்த உடலோடு மீளாத விண்ணுலகம் புகுந்து இன்புறுவர் போர்வீரர்கள் என்ற நம்பிக்கை உணர்வு வீரர் நெஞ்சில் ஊறியிருந்தது என்பது புலனாகிறது.

## தொழில் மேலாண்மை

தமிழ் மக்கள் தங்கள் உயரிய நாகரிகத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும் தொழில்கள் பலவற்றை அறிந்திருந்தனர் என்பது சங்க இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது. தொடக்க நிலையில் தொழில்களுக்கிடையே உயர்வு, தாழ்வு பற்றிய வேறுபாடு இல்லை அவரவர் செய்கடன் உணர்வே மிகுந்து இருந்துள்ளது.

“உண்பது நாழி உடுப்பவை இரண்டே

பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே”

நக்கீரனார் தனது பாடலின் வழி உலகியலின் உண்மையை உணர்த்துகிறார் (Subiramaniyan, 2010). அதாவது உலகத்தை பொதுவானது என்று நினைக்காமல் தமக்கே உரிமையானது என்று ஆட்சிச் செலுத்தும் ஒருவர்க்கும், இடைச்சாமத்து துஞ்சாமல் வேட்டையாடும் அருளில்லாத ஒருவனுக்கும் உண்ணும் உணவு நாழி அளவே ஆகும். உடுக்கும் ஆடை இரண்டே ஆகும். ஆகவே செல்வத்துப் பயனானது பிறருக்கு கொடுத்து உதவுவதே ஆகும் என்பதின் வழி என் சாண் உடம்பிற்கு எது வேண்டும் என்பதை தெளிவுப்படுத்தியுள்ளார்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு உயிர் நாடியாக இருப்பது உழவுத்தொழிலேயாகும். மானிடவாழ்விற்கு இன்றியமையாத உணவை அளிப்பது இவ்வுழவுத்தொழிலே ஆகும்.

“நீர் இன்று அமையாயாக்கைக்கு எல்லாம்

உண்டு கொடுத்தோர் உயர்க்கொடுத்தோரே”

குடபுலவியனார்தன்பாடலின் மூலம் நீர் இல்லாமல் உயிர்கள் இவ்வுலகில் வாழமுடியாது என்கிறார் (Subiramaniyan, 2010). மேலும் நிலத்தையும் நீரையும் இணைத்தவர் உடலையும் உயிரையும் தந்தவர் ஆவார். உணவு என்று சொல்லப்படுவது நிலமும் நீரும். நம் உடலானது உணவை முதலாக உடையது. ஆகவே உண்டு கொடுத்தவரே உயிர்கொடுத்தவர் ஆவர் என்று உழவை சிறப்பித்துள்ளார்.

நாகரிகம்மிக்க சமூகத்திற்கு சிறந்த அடையாளமாக இருப்பது ஆடை ஆகும். இதற்கு நெசவுத் தொழிலே அடிப்படை. அக்காலத்தில் இத்தொழிலானது மிகச்சிறப்புடன் நடைபெற்றது.

பாம்உரிஅன்னவடிவினகாம்பின்

கழைபடுசொலியின்இழைஅணிவாரா

ஒண்பூங்கலிங்கம்” (Subiramaniyan, 2010)

மாறோக்கத்துநப்பசலையார் தமது பாடலில் அவியன் தனக்கு கொடுத்தலின் சிறப்பினைப் பற்றிபாடும் போது பாம்பு சட்டை போன்ற வடிவினதும் மூங்கில் உள்ளே பெயர்த்தெடுக்கப்படும் வெள்ளியத் தோள் போன்றதும் மெல்லிய நெருங்கிய பூ வேலைப்பாடுடையதுமாகிய ஆடையை உடுக்கச் செய்தான் என்று கூறியதன் மூலம் நெசவுத் தொழிலின் நுட்பமான திறனை உணரமுடிகின்றது. இவ்வாறு பல்வேறு பாடலின் வழிபுறநானூறு நெசவுத்தொழிலைப் போற்றுகிறது (Balasubramanyan, 2007; Kalpana Seikiyar, 2009).

## முடிவுரை

சங்கப் புறப்பொருள் நூல்களில் முடிமணியாகத்திகழும் புறநானூறு தமிழர் வாழ்வியலை வெளிப்படுத்தும் ஒரு வரலாற்று நூலாகும். தமிழர்கள் நில அடிப்படையில் வாழ்ந்தனர். வாழ்ந்த நிலங்களுக்கு ஏற்பவேகடவுள் கொள்கையும் அமைத்துக் கொண்டனர். மேலும் மறுபிறப்பிலும் நம்பிக்கை உடையவர்களாகவும் இருந்தனர். இல்லம் தேடிவரும் புதியவரை இன்முகத்தோடு உபசரிக்கும் பண்பும் புலவர்பலருக்கு வேண்டிய பொன் பொருள் கொடுப்பதுடன் தக்கமரியாதையுடன் நடந்துக் கொள்ளும் நற்குணமும் பெற்றிருந்தனர். அனைவரையும் உறவுகளாக பார்க்கும் நல்ல பண்பாடே தமிழரின் வாழ்வியல் அறமாக போற்றப்படுகிறது. இதன் அடிப்படையே இன்றளவும் இம்மண்ணுலகில் மனதநேயமும் சகோதரத்துவமும் நிலைபெற்று வாழ்கின்றது என்பதே திண்ணம்.

## Reference

Balasubramanyan, Ku. Ve., (2007), Sanga Illakiyathil Poorapporul, Meiyappan Pathipagam, Chidambaram, India.

Kalpana Seikiyar (2009), Poorananutril Tamilar Vazhviyal, Tamil MaanPathipagam, Chennai, India.

Raja, Ke., (2008), ThoolkappiyamPoorulathigaram, Pavai Publication, Chennai, India.

Subiramaniyan, Sa.Ve., (2010), Sanga Illakiyam – Ettuthogai, Moolamum Thelivuraiyum, Thokuthi – 3, Meiyappan Pathipagam, Chidambaram, Tamil Nadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License